வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin – 628 004
Tamilnadu
Public Relations Office

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 & ISO 45001:2018 and ISPS Compliant Port

Telephone : 0461 - 2352360
Email Id : sasiraj.ms@vocport.gov.in
Website : www.vocport.gov.in

Press Release No: 4 Date: 05.05.2023

**Shri Shantanu Thakur, Hon'ble Minister of State for Ports, Shipping & Waterways, inducts the vessel MSS Galena into India Maldives Service, the Direct Shipping Service from VOC Port, Tuticorin to Male**

Today on 05.05.2023, the Hon'ble Minister of State for Ports, Shipping & Waterways, Shri Shantanu Thakur, flagged-off the Direct Shipping Service between India to Maldives, at V.O. Chidambaranar Port.

Speaking on the occasion, Shri Shantanu Thakur, the Hon'ble Minister of State for Ports, Shipping & Waterways stated that the induction of this vessel is another milestone in the comprehensive bilateral relations between India and Maldives. He mentioned that with this vessel, the direct cargo service will offer excellent business opportunities to the EXIM trade of both India & Maldives and will further cement close ties between the two countries, enhancing people-to-people contact and boosting bilateral trade.

During its maiden journey, the vessel 'M.V. MSS Galena' with a capacity to carry 421 TEUs of containers and provision to carry bulk cargo, will be carrying 270 TEUs of containers from Tuticorin. The vessel will sail from VOC Port, Tuticorin to Male today, and is scheduled to reach Male on 07.05.2023.

Shri T.K. Ramachandran, I.A.S., Chairman, VOC Port Authority, in his address stated that the Port is always committed to provide cost effective, efficient logistics service to the Maritime Community. It is heartening to note that the bilateral trade between India and Maldives has considerably increased to touch USD 323.9 Million and the Inda - Maldives service has played a vital role in connecting the EXIM community of both the countries. India is the 3$^{rd}$ largest Business partner of Maldives and with the induction of this vessel, direct and dependable transport link will further the international trade and business.

Capy. B.K. Tyagi, Chairman & Managing Director, Shipping Corporation of India, in his address stated that this Container Service, operated by the Shipping Corporation of India, concretely fulfills the commitment made by Prime Minister Shri Narendra Modi during his visit to Maldives. The Shipping service operated by Shipping Corporation of India will run thrice a month and will provide a cost effective, direct and alternate means of transportation of goods between India and Maldives.

The event was graced by Mr. Munu Mahawar, High Commissioner of India to the Maldives, Mr. H.E. Ahmed Zuhair, Minister of State for Transport and Civil Aviation, Maldivian Ministry, Mr. H.E. Hamadh Abdul Ghanee, Deputy Minister of Transport and Civil Aviation, Mr. Ibrahim Shaheeb, High Commissioner of Maldives to India, and Capt. Mohamed Nazim, Maldives State Shipping, through Video Conferencing.

Shri Bimal Kumar Jha, Deputy Chairman, VOC Port Authority, welcomed the gathering. The event was attended by Board Members of VOC Port, Senior Officials of the V.O. Chidambaranar Port Authority, Shipping Corporation of India, Stakeholders of the Port, and the Maritime fraternity of Tuticorin.

The above details were released in the Press Release by V. O. Chidambaranar Port Authority, today.

PUBLIC RELATIONS OFFICER

SAGARMALA

G20

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம்
वी.ओ. चिदम्बरनार पत्तन प्राधिकरण
V.O.Chidambaranar Port Authority
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate, Tuticorin - 628 004
Tamilnadu
Public Relations Office

Certificate under :
IMS - ISO 9001:2015; ISO 14001:2015 &
ISO 45001:2018 and ISPS Compliant Port

Telephone : 0461 - 2352360
Email Id : sasiraj.ms@vocport.gov.in
Website : www.vocport.gov.in

பத்திரிக்கைச் செய்தி எண்:4 தேதி :05.05.2023

**திரு. சாந்தனு தாக்கூர், மாண்புமிகு மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து இணை அமைச்சர் அவர்கள் இந்தியாவிலிருந்து மாலத்தீவிற்கு (மாலே துறைமுகத்திற்கு) நேரடி கப்பல் சேவையை துவக்கி வைத்தார்கள்.**

திரு. சாந்தனு தாக்கூர், மாண்புமிகு மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து இணை அமைச்சர் அவர்கள் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் வைத்து 05.05.2023 இன்று இந்தியாவிலிருந்து மாலத்தீவிற்கு நேரடி கப்பல் சேவையை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள்.

இச்சேவையை துவக்கி வைத்து மாண்புமிகு மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து இணை அமைச்சர் அவர்கள் பேசுகையில் இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையேயான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு இக்கப்பல் சேவை மேலும் ஒரு மைல்கல்லாக அமையும் என்று குறிப்பிட்டார். மேலும் இக்கப்பல் சேவை இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல் மாலத்தீவு மற்றும் இந்திய மக்களிடையே நல்உறவினை மேம்படுத்துதற்கு உறுதுணையாக இருக்கும் என்று கூறினார்.

இந்த முதல் பயணத்தின் போது 421 டி.இ.யு சரக்குபெட்டகங்களை எடுத்துச் செல்லும் திறன் மற்றும் மொத்த சரக்குகளை எடுத்துச் செல்லும் வசதி கொண்ட எம்.எஸ்.எஸ். கலேனா என்ற இக்கப்பல் 270 டி.இ.யு சரக்குபெட்டகங்களை தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து மாலத்தீவிற்கு எடுத்து செல்கிறது. இந்த கப்பல் இன்று தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டு 07.05.2023 அன்று மாலே துறைமுகத்தை சென்றடையும்.

திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையத் தலைவர் அவர்கள் தனது உரையில் வ.உ.சிதம்பரனார் துறைமுகம் குறைந்த செலவில் நிறைந்த சேவைகளை வழங்குவதற்கு உறுதிபூண்டுள்ளது என்று கூறினார். மேலும் அவர் இந்தியாவிற்கும் மாலத்திற்கும் இடையேயான இரு தரப்பு வர்த்தகம் 323.9 மில்லியன் அமெரிக்கா டாலர்களாக அதிகரித்துள்ளது மற்றும் இரு நாடுகளின் வர்த்தக சமூகத்தை இணைப்பதில் இந்தியா, மாலத்தீவு இடையேயான நேரடியான இச்சேவை முக்கிய பங்கு வகித்துள்ளது என்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினார். இந்தியா, மாலத்தீவின் 3வது பெரிய வர்த்தக பங்காளியாவதோடு நம்பகமான கடல் வர்த்தக போக்குவரத்து இணைப்பு சர்வதேச வர்த்தகம் மற்றும் வணிகத்தை மேலும் மேம்படுத்தும் என்று கூறினார்.

மேலும் கேப்டன் பி.கே. தியாகி, இந்திய கப்பல் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்கள் தனது உரையில், இந்திய கப்பல் கழகம் மூலம் இயக்கப்படும் இந்த சரக்குபெட்டக சேவை, மாண்புமிகு பாரதபிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்கள் 2019-ம் ஆண்டு ஜீன் மாதம் தனது மாலத்தீவு பயணத்தின் போது அளித்த உறுதி மொழியை உறுதியுடன் நிறைவேற்றும் வண்ணம் இச்சேவை துவக்கப்பட்டுள்ளது. இக்கப்பல் சேவையை இந்திய கப்பல் கழகம் மாதத்திற்கு 3 முறை இயக்கப்படும் இச்சேவையின் மூலம் குறைந்த செலவில் சரக்குகளை நேரடியாக இந்தியாவிலிருந்து மாலத்தீவிற்கு எடுத்து செல்ல முடியும்.

இந்நிகழ்வில் திரு முனு மஹவர், மாலத்திவிற்கான இந்திய உயர் ஆணையர், திரு. எச்.இ. அகமது சூஹைர், மாண்புமிகு மாலத்தீவு போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்திற்கான இணை அமைச்சர், திரு எச்.இ. ஹமாத் அப்துல் காண், மாண்புமிகு மாலத்தீவு போக்குவரத்து மற்றும் விமான போக்குவரத்து துணை அமைச்சர், திரு இப்ராஹிம் ஷாஹீப், இந்தியாவிற்கான மாலத்தீவு உயர் ஆணையர், கேப்டன் முகமது நாஜீம், மாலத்தீவு இணை துறைமுகங்கள் ஆகிய அனைவரும் மாலத்தீவிலிருந்து காணொலி காட்சி மூலம் கலந்து கொண்டனார்கள்.

திரு. பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணைய துணைத் தலைவர் வரவேற்புரையாற்றினார். இத்துவக்க விழாவில் வ.உ.சிதம்பரனார் துறைமுக நிர்வாக குழு உறுப்பினர்கள், திரு.கே.வி.வி.ஜி.திவாகர்,இ.வ.ப. ஆணையர், சுங்கத் துறை, தூத்துக்குடி, உயர் அதிகாரிகள், வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் மற்றும் இந்திய கப்பல் போக்குவரத்து கழகம், துறைமுக உபயோகிப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி